# இலங்கை விவகாரத்தில் ஐநா அமைப்பின் பங்களிப்பு அதிருப்தி

## சர்வதேச மன்னிப்பு சபை குற்றச்சாட்டு

சர்வதேச நீதி அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளது இலங்கை விவகாரத்தில் ஐநா அமைப்பின் பங்களிப்பு அதிருப்தி தருகின்றது என சர்வதேச மன்னிப்பு சபை குற்றச்சாட்டியுள்ளது. சர்வதேச மன்னிப்புச் சபையினால் வெளியிடப்பட்டுள்ள ஆண்டறிக்கையில் 111 நாடுகளில் சித்திரவதைச் சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக சுட்டிக்காட்டியுள்ளது. பலம்பொருந்திய நாடுகள் தங்களது சுயலாப அரசியல் அபிலாஷைகளை பூர்த்தி செய்யும் நோக்கில் சர்வதேச நீதியை நிலைநாட்டத் தவறியுள்ளதாக மன்னிப்புச் சபை விமர்சித்துள்ளது. குறிப்பாக கடந்த வருடம் இலங்கையில் இடம்பெற்ற யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் விசாரணைகள் நடத்தப்படவில்லை என குற்றம் சுமத்தியுள்ளது. இலங்கை விவகாரத்தில் ஐக்கிய நாடுகள் அமைப்பின் பங்களிப்பு அதிருப்தி அளிக்கும் வகையில் காணப்படுவதாக சுட்டிக்காட்டியுள்ளது.யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் இதுவரையில் எவரும் தண்டிக்கப்படவில்லை எனத் தெரிவித்துள்ளது.அமெரிக்காவும், ஐரோப்பிய நாடுகளும் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் ஆற்ற வேண்டிய கடமைகளை தவறவிட்டுள்ளதாக சுட்டிக்காட்டியுள்ளது. குறிப்பாக இஸ்ரேலினால் காஸா பள்ளத்தாக்கில் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகளக்கு எதிராக எவ்வித அழுத்தங்களும் பிரயோகிக்கப்படவில்லை என தெரிவித்துள்ளது. பிரித்தானியாவில் இடம்பெற்ற சித்திரவதைச் சம்பவங்கள் தொடர்பில் பூரண விசாரணை நடத்தப்பட வேண்டுமென மேலும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சிறீலங்காவில் நடைபெற்ற போர்க் குற்றங்கள் தொடர்பில் விசாரணைக்குழு அமைக்கப்படுவது அவசியமானது என பிரித்தானியா தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, சிறீலங்காவில் நடைபெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பில் விசாரணைகள் அவசியம் என்பதை பான் கீ மூனுடன் நடைபெற்ற சந்திப்பின் போது தாம் வலியுறுத்தியிருந்ததாகவும், அதற்கு பிரித்தானியா முழு ஆதரவுகளையும் வழங்கும் எனவும் ஐ.நாவுக்கான பிரித்தானியா தூதுவர் லயால் கிரான்ட் தெரிவித்துள்ளார். பிரித்தானியாவில் புதிய அரசு பதவியேற்றுள்ள போதும் அது அனைத்துலக நெருக்கடிகளுக்கான குழுவினரின் அறிக்கைக்கு ஏற்ப நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.





நன்றி வீரகேசரி

---

ளனர் என அரசாங்கம் தெரிவித்துள்ளது. சிறீலங்கா இராணுவப் பிரிவொன்று மத்திய ஆபிரிக்காவுக்குச் செல்வது இதுவே முதற்தடவையாகும். சிறீலங்கா இராணுவத்தின் தொழிற்சார் தகைமை மற்றும் அதன் திறமை என்பனவற்றுக்கு ஐ.நா வழங்கியுள்ள அங்கீகாரமாகவே இது கருதப்படுவதாக இராணுவம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சிறீலங்கா இராணுவம் அண்மையில் போர்குற்றத்திலும், இனப்படுகொலையிலும் ஈடுபட்டுள்ளது. இவர்களை விசாரிக்கவேண்டும் என கூறும் சர்வதேச சமூகமும் ஐ.நாவும் இப்படியான குற்றம் இழைத்த இராணுவத்தினை எவ்வாறு ஐ.நாவில் சேர்க்கமுடியும்? அத்துடன், ஏற்கனவே, ஐ.நா. படையில் இருந்து கையிட்டியில் பாலியல் வல்லுறவுகளில் ஈடுபட்டு பெருந்தொகையாக சிறீலங்காப் படையினர் நாட்டுக்குத் திருப்பியனுப்பப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### இடம்பெயர்வில் 7வது இடம்!

சர்வதேச ரீதியாக அதிக எண்ணிக்கையிலான மக்கள் இடம்பெயர்ந்த நாடுகளில் இலங்கை 7வது இடத்தில் இருப்பதாக ஐக்கிய நாடுகளினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு அறிக்கையொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கையில் இதுவரை காலமும் 2 இலட்சத்து 80 ஆயிரம் பேர் இடம்பெயர்ந்துள்ளதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. சர்வதேச ரீதியாக அதிக எண்ணிக்கையிலான மக்கள் இடம்பெயர்ந்த நாடுகளில் பாக்கிஸ்தான் முதலாவது இடத்திலும், கொங்கோ குடியரசு இரண்டாவது இடத்திலும், சூடான் 3வது இடத்திலும், சோமாலியா நான்காவது இடத்திலும் உள்ளன. எனவே இதுவரைக்கும் சர்வதேச ரீதியாக 2 கோடியே 70 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் இடம்பெயர்ந்து வாழ்வதாக ஐக்கிய நாடுகளினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. வெளிநாடுகளிலேயே பத்து இடம்பெயர்ந்த 10 இலட்சம் தமிழர்கள் இருப்பார்களே..?

### இந்திய – சிறீலங்கா உறவுப்பாலமாக பசில்

இந்திய - சிறீலங்கா நாடுகளின் உறவுகளைக் கையாளும் பொறுப்பை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தனது சகோதரரும் ஆலோசகரும், பொருளாதார அபிவிருத்தி அமைச்சருமான பசில் ராஜபக்சவிடமே ஒப்படைத்துள்ளார். வெளிவிவகார அமைச்சராக ஜி.எல்.பீரிஸ் நியமிக்கப்பட்டுள்ள போதிலும், தனது நம்பிக்கைக்குரிய சகோதரர் பசிலிடம் இந்தியாவைக் கையாளும் விடயங்களை ஒப்படைத்துள்ளார். ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் இந்தியாவிற்கான பயண ஏற்பாடுகளை மேற்கொள்வதற்காக கடந்த வாரம் பசில் ராஜபக்ச புதுடில்லி செல்லவிருந்தார். எனினும் மழை வெள்ளம் காரணமாக ஏற்பட்ட அனர்த்தத்தைத் தொடர்ந்து அமைச்சர்கள் வெளிநாடு செல்வதற்கு ஜனாதிபதி தடை விதித்துள்ளமையால் பசிலும் புறப்படமுடியவில்லை.

### கடத்தல்கள் சாதாரணமாகியது

சாவகச்சேரி நவீன சந்தைப் பகுதியில் வைத்து ஆறு வயதுச் சிறுமி ஒருவரைக் கடந்த வெள்ளிக்கிழமை கடத்தும் முயற்சி முறியடிக்கப்பட்டுள்ளது. கடந்த வருடம் முள்ளிவாய்க்கால் பகுதியில் கணவனை இழந்த பெண் ஒருவர் தனது உறவினரைப் பார்ப்பதற்கு வவுனியா செல்வதற்காக சாவகச்சேரிக்கு வந்திருந்தார். அங்கு இவரது ஆறு வயது மகளை நவீன சந்தை விறாந்தையில் விட்டுவிட்டு சந்தைக்குள் மரக்கறி வாங்கச் சென்றிருந்தார். மரக்கறி வாங்கிவிட்டு அவர் வந்து பார்த்தபோது மகளைக் காணாது அப்பகுதி முழுவதும் தேடிவிட்டுக் கடைசியாகப் காவல் நிலையத்தில் முறையிட்டார். இதன் பயனாக இரவு 7 மணியளவில் சாவகச்சேரி டச்சு வீதியிலுள்ள வெதுப்பகம் ஒன்றுக்கு முன்பாக உள்ள மிதிவண்டி திருத்தும் நிலையத்தில் காணாமல்போன சிறுமி கண்டு பிடிக்கப்பட்டார். அங்கு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டிருந்த வேளையில் கடத்திச் சென்ற நபர் அங்கு வந்தபோது மிதிவண்டி திருத்தும் நிலைய உரிமையாளர் அவரை அடையாளம் காட்டினார். சிறுமியைக் கடத்திச் சென்ற நபர் நிலைமை அறிந்து ஓடத் தொடங்கினார். எனினும் நின்ற பொதுமக்களும் காவல்துறையினரும் அந்த நபரைத் துரத்திச் சென்று பிடித்தனர். மட்டுவிலைச் சேர்ந்த இந்நபர் தனிப்பட்ட பகை காரணமாகவே சிறுமியை கடத்தியதாகக் கூறப்பட்டது.

### இராணுவத்துக்கும், புலிகளுக்கும் ஒரே முகவர்

சிறீலங்கா இராணுவத்திற்கு தொடர்பாடல் உபகரணங்களை விற்பனை செய்த ஆயுத விற்பனை முகவர் ஒருவர் அதே வகையான பொருள்களை விடுதலைப் புலிகளுக்கும் விற்பனை செய்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது. இந்த உபகரணங்கள் முல்லைத்தீவு பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. கண்டுபிடிக்கப்பட்டுள்ள தொலைத் தொடர்பு உபகரணங்களில் இராணுவத்தினருக்கு விற்பனை செய்த உபகரணங்களை தடை செய்யக் கூடிய மாற்று உபகரணமும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக சிறீலங்கா பாதுகாப்புத் தரப்பு தெரிவித்துள்ளது.

### தாண்டிக்குளத்தில் பேருந்து விபத்து

ஏ-9 வீதியில் வவுனியா தாண்டிக்குளம் பகுதியில் கடந்த செவ்வாய் (25) அதிகாலை பேருந்து ஒன்று குடைசாய்ந்ததில், ஒருவர் உயிரிழந்தார். 7 பேர் படு காயமடைந்தனர். கொழும்பில் திருமண நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு யாழ்ப்பாணத்துக்குத் விட்டு திரும்பிக் கொண்டிருந்தவர்களுக்கே இந்த அவலம் ஏற்பட்டது. விபத்தில் மரணமானவர் அரியாலையைச் சேர்ந்தவர் என்று தெரியவருகின்றது. காயமடைந்தவர்கள் வவுனியா வைத்தி யசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர். அவர்களில் மூன்றரை வயதுக் குழந்தை ஒன்று மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டது.